ஆனாலும், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட நாட்டுப் படகு மீனவர்கள் இரட்டை மடி, சுருக்கு மடி வலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் எண்ணிக்கை அங்கே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இதன்மீது உறுதியான நடவடிக்கை எடுத்தால்தான் நாட்டுப் படகு மீனவர்களைப் பாதுகாக்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு தங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நேரமில்லை. இன்னும் இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகள் இருக்கின்றன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமேஸ்வரம் பகுதியிலே இப்படிப்பட்ட, இரட்டை மடி இழுவலைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று சொன்னார். அந்த இராமேஸ்வரம் பகுதியில்தான் ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்பாக இரட்டை மடி வலைகளைப் பிடித்து அரசு ஜப்தி செய்திருக்கிறது. அரசே பறிமுதல் செய்துவிட்டது. ஆகவே, அதிலிருந்து இன்றைக்குவரை இரட்டை மடி இழுவலைகள் இல்லையென்பதுதான் எங்களுக்குப் பெறப்படுகிற தகவல். அப்படி அங்கு நடைபெறுமானால் அரசின் கவனத்திற்குத் தெரிவிக்கின்றபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

7. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 26-4-2013 வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர்கள் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம், மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள்

துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் 30-4-2013 செவ்வாய்க்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

29-4-2013 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகள் 14-5-2013 செவ்வாய்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

30-4-2013 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை 26-4-2013 வெள்ளிக்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

14-5-2013 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, 29-4-2013 திங்கட்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவையின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*